MAY 2024

U/ID 33205/ URT1A/URL1A

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்காணும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. 'ராணுவ நடவடிக்கை' எனும் நூல் தரும் செய்தி யாது?

2. குகை வட்டங்கள் என்றால் என்ன?

3. தமிழக வரலாற்றில் பல்லவர் கால ஓவியம் பற்றி எழுதுக.

4. தமிழருக்கும் பாபிலோனியருக்குமான வாணிபத் தொடர்பை எவ்வாறு அறியலாம்?

5. மஸ்லின் துணியின் சிறப்பினை எழுதுக.

6. 'அசுவத்தம்' எனும் சொல் எதனைக் குறிக்கும்.

7. எண்பேராயத்தின் உறுப்பினர்கள் யாவர்?

8. நெடுநல்வாடை குறித்து எழுதுக.

9. போளூர்க்கல்வெட்டுச் செய்தியை எழுதுக.

10. சிம்மவர்மன் பற்றிக் குறிப்பு வரைக.

11. சோழர்களின் இசைக்கலை ஆர்வத்தைக் குறிப்பிடுக.

12. சதுர்வேதி மங்கலம் என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. பல்லவர்களின் ஆட்சி விரிவாக்கம் பற்றி விளக்குக.

14. இரும்புக்கால நிலைச் செய்திகளை எடுத்துரைக்க.

15. ஹிராஸ் பாரதியாரின் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

16. கிரேக்கர்கள் தமிழகத்துடன் கொண்ட தொடர்பை விளக்குக.

17. சங்ககால ஆட்சிமுறை பற்றி எழுதுக.

18. குடைவரைக் கோயில்களின் சிறப்பினை எழுதுக.

19. மூன்றாம் குலோத்துங்கனின் அரசியல் செயல்பாட்டை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. தமிழக வரலாற்றுக்கான அடிப்படை ஆதாரங்களை விளக்குக.

21. பண்டைய தமிழரின் அயல்நாட்டுத் தொடர்பை விவரிக்க.

22. சங்ககாலத் தமிழகத்தின் பொருளாதார நிலையை விவரிக்க.

23. பல்லவர்காலத் தமிழகம் குறித்துக் கட்டுரைக்க.

24. சோழர்கால மக்களின் வாழ்வியலை விவரிக்க.